# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, அத்தனகல்ல அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, யூலை மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 10.00 தபாற்செலவு : ரூபா 5.00

# 2008 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, அத்தனகல்ல அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ. ஒ–கூ 23/2004

## அத்தனகல்ல அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

"அத்தனகல்ல அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும், சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புடைய கருமங்களையும் பயனுறக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இற்றைவரை தாபிக்கப்பட்டிருந்ததாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இது வரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, அத்தனகல்ல அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தனகல்ல அபிவிருத்தி மன்றத்தில் தற்போதைய உறுப்பினர் களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அத்தனகல்ல அபிவிருத்தி மன்றம்" என்னும் பெயர்மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்க அத்தனகல்ல அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

2-PL 002678 - 1,065 (2007/12)

வும்படவாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) வறிய இலங்கையர்களுக்கு வீடுகளை ஏற்பாடு செய்தல்;

(ஆ) அநாதைக் குழந்தைகளுக்கு உணவு, ஆடை அணிகள், மருந்துவகைகளை வழங்குதலும், வறியவர்களுக்கான மருத்துவ பிணிச் சேவைகளை நடாத்துதலும் ;

(இ) இலங்கையில் சிறப்புரிமை குறைந்த பிள்ளைகளின் சமூக, கல்வி மற்றும் கலாசார அபிவிருத்திக்காகச் செயலாற்றுதலும், புலமைப்பரிசில்களை வழங்குதலும், தாபரிப்புப் பெற்றோர் முறையை தாபித்தலும் ;

(ஈ) பெண்களின் பொருளாதார நிலைமையைப் பலப்படுத்துவதற்காக சுயதொழில் வேலைத் திட்டங்களை ஆரம்பித்தல், அறிவினைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சுயதொழில்களுக்கான கடனுதவிகளை வழங்குதல் ;

(உ) முதியோர் இல்லங்களையும், சிறுவர் இல்லங்களையும் நிறுவுதல், பேணிவருதல், அநாதை இல்லங்களை நிறுவுதல், மந்தபுத்தி உடையவர்களினதும், உடல் ஊனமுற்றோர்களினதும் நலனோம்பலை விருத்தி செய்தல் ;

(ஊ) இலங்கை இளைஞர்களிடையேயும், வேறு நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களிடையேயும் பொருத்தமான முறைகளினூடாக சிநேகபூர்வ தொடர்புகளை விருத்தி செய்தல், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு இலங்கைக்கு வருகின்ற அல்லது இலங்கையிலிருந்து செல்கின்ற பிரதிநிதிகளின் குழுவுக்கு வசதியளித்தல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல் ;

(எ) இளைஞர்களுக்கான கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சி வேலைத்திட்டங்களை நடத்துதல் மற்றும் தொழில்முயற்சியை ஆரம்பிக்க அல்லது சுயதொழிலில் ஈடுபடுவதற்காக அவர்களுக்கு நிதி மற்றும் வேறு வகையான உதவிகளை வழங்குதல் மற்றும் தம்மால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்கான விற்பனை நிலையங்களைப் பராமரித்தல் அத்துடன் கால்நடை அபிவிருத்திக்காக விலங்குப் பண்ணைகளை தாபித்தல் ;

(ஏ) வழிபாட்டுத் தலங்களுக்கு உதவிகளையும் ஒத்தாசைகளையும், அறநெறிப் பாடசாலைக் கல்விக்கு உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்குதல், பிக்குமார்களுக்கும், மதகுருமார்களுக்கும் கல்விக்கான உதவிகளை வழங்குதல் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குதல் ;

(ஐ) சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும், மக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தலும் ;

(ஒ) பாடசாலையிலிருந்து வெளியேறுபவர்களுக்கும், அறிவினைப் பெற்றுள்ளவர்களுக்கும் கணனிக் கல்வியினையும், மொழிக் கல்வியையும் வழங்குதல் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கான விரிவுரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், கண்காட்சிகளை நடாத்துதல் ; அத்துடன்

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்தகுறிக்கோள்களைக் கொண்ட பிற நிறுவனங்களுடனும், அமைப்புக்களுடனும் இணைந்து செயலாற்றுதல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் கீழ்க்காணும் தத்துவங்களைக் கொண்டிருக்கும் :-

(அ) உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்ளல், பண அல்லது பண்டக ரீதியான

கொடைகள், மானியங்கள், நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நிதியங்களை அதிக வருமானம் பெற்றுத்தரக்கூடிய ஏதேனும் முதலீடுகளில் ஈடுபடுத்தலும், அத்தகைய முதலீடுகளை மீளப்பெறலும் மீள் முதலீடு செய்தலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நடைமுறைப் படுத்துவதற்கேதுவாக அவசியமாகக்கூடியவாறான அலுவலர்களையும், பணியாளர்களையும் கடமையில் ஈடுபடுத்தல், சேவைக்கமர்த்தல் மற்றும் அவர்களுக்கான ஊதியம் செலுத்துதல், மற்றும் பணிக்கொடை செலுத்துதல் அத்தகைய அலுவலர்களினதும், ஊழியர்களினதும் ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் புரிதல் ;

(ஈ) வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், முடிவுறுத்தல், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுதல் அல்லது திரட்டுதல் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளைவான அல்லது அதற்கு உசிதமான அத்தகைய வேறு எல்லாக் காரியங்களையும் செய்தலும், நடைமுறைப்படுத்துதலும் ;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபன விதிகளுக்கமையவும் அத்தகைய விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு அவற்றுக்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்டமைந்த முகாமைச்சபையொன்றினால் நிருவகிக்கப் படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்றவர்களான மன்றத்தின் முகாமைச் சபையாக அமைதல் வேண்டும்.

6. (1) காலத்திற்குக்காலம் ஏதேனும் பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிக்க உரித்துடைய உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மை ஒன்றினால் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல், அவர்களை விலக்குதல், முகாமைச்சபை உறுப்பினர் தேர்தல், கூட்டுத்தாபனத்தின் முகாமைச்சபை மற்றும் பல்வேறு அலுவலர்கள், முகவர், சேவையாளர்களின் கடமைகளின் நடத்தை என்பவற்றுக்காகவும், கூட்டுத்தாபனம் மற்றும் முகாமைச்சபையின் கூட்டங்களில் அலுவல்களை கொண்டுநடாத்துவதில் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கைமுறை என்பவற்றுக்காகவும், வேறு வகையாக பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்யவும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காக இச்சட்டத்தினதும், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் கூட்டுத் தாபனத்திற்காக ஆக்குதல் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதுபோன்று அதேபோன்ற கூட்டமொன்றில், அதேமுறையில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குள்ள எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அத்திகதியன்று மன்றத்திற்கு செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்குச் சட்டத்தின் ஏற்பாடுகளுக் கமைய கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

சங்கத்தினால் அல்லது சங்கத்திற்குச் செலுத்தப் படற்பாலதான கடன்கள்.

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கையேற்கவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருத்தல்.

ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமையவும் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாகப் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பிரதம செயலாளரின் பொறுப்பில் இருக்கவேண்டுமென்பதோடு, தலைவரதும், போஷகர் ஒருவரதும் முன்னிலையில் அன்றி சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது. தலைவரும், போஷகரும் அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாகச் சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

கணக்கும் கணக்காய்வும்.

**11.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம், மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல், வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவின் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர், அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

12. கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்போது கூட்டுத்தாபனத்தின் கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படாமல் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட வேறு சங்கங்களுக்குக் கொடுக்கப்படல் அல்லது ஒப்படைக்கப்படல் வேண்டும். கலைப்பின்போ[illegible] எஞ்சிய ஆதனங்கள்.

13. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் மக்கட்குழு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது. குடியரசினது[illegible] மறுபேரினது[illegible] உரிமைகளை[illegible] பேணுதல்.

14. இச்சட்டத்திலுள்ள சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சி[illegible] உரை மேலோ[illegible] நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்